

கழக அரசில் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்த சு.கிருஷ்ணசாமி - இ.புவனேஸ்வரி ஆகியோரது புதல்வர் இ.பரத்சூர்யா - க.மனோ சித்ரா ஆகியோரின் மணவிழா அண்மையில் நடைபெற்றது. இம்மணமக்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சு.கிருஷ்ணசாமி - திருமதி இ.புவனேஸ்வரி கிருஷ்ணசாமி ஆகியோர் உள்ளனர்.

### பாரத ராஷ்ட்ர சமிதி கட்சியின்

# செயல் தலைவர் கே.டி.ராமா ராவ் பிறந்தநாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 26-

பாரத ராஷ்ட்ர சமிதி கட்சியின் செயல் தலைவர் கே.டி. ராமா ராவ் பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பாரத ராஷ்ட்ர சமிதி செயல் தலைவர் கே.டி.ராமா ராவ் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.





தாங்கள் நல்ல உடல்நலம், நீண்ட ஆயுளுடன் திகழ்ந்து தங்களின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய விழைகிறேன். எதிர்வரும் காலம் தங்களுக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் பொதுவாழ்வில் மேலும் பல மைல்கற்களையும் தருவதாக அமையட்டும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர்

# மருத்துவர் இராமதாஸ் பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை 26-

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் ஐயா அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

சமூகநீதிக்கான பல போராட்டங்களை முன்னெடுத்து, முக்கியக் குரலாக ஒலித்து வந்த தாங்கள் அரசியலில் இருந்து ஓய்வை அறிவித்திருக்கும் நிலையில், தங்களது ஓய்வுக்காலம் மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் திகழ்ந்திட விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

### மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 53 மருந்துகள் தரமற்றவையா?

# தவறிழைக்கும் மருந்து நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

## மக்களவையில் டி.ஆர்.பாலு எம்.பி. வினா!

புதுடெல்லி, ஜூலை 26-

மக்கள் தினசரி பயன்படுத்தும் 53 அத்தியாவதிய மருந்துகள் அரசால் நியமிக்கப்பட்ட தரத்துடன் இல்லாததால் அவை உட்கொள்ள தகுதி அற்றவை என அண்மையில் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாடு அமைப்பு அறிவிக்கை செய்துள்ளதா? அப்படியானால், அதன் முழு விவரங்கள் என்ன? தவறிழைத்த மருந்து நிறுவனங்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? என மக்களவையில் திமுக மக்களவைக் குழுத் தலைவரும் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு நேற்று (24.7.2026) எழுத்துப்பூர்வமாக மக்களவையில் ஒன்றிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் அமைச்சகத்தின் இணையமைச்சர் திருமதி. அனுபிரியா பட்டேல் அவர்கள் பதிலளித்தார்.



நியமிக்கப்பட்ட தரத்தின் படி தயாரிக்கப் படாத மருந்துகள், கலப்பட மருந்துகள், கள்ளமருந்துகள் (spurious drugs) போன்ற உட்கொள்ளத் தகுதி இல்லாத மருந்துகளின் விவரங்களை மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (சென்ட்ரல் டிரக்ஸ் ஸ்டாண்டார்டு கன்ட்ரோல் ஆர்கனைசேஷன் - CDSCO) தனது வலைதளத்தில். மருந்துகள் எச்சரிக்கை (டிரக்ஸ் அலர்ட்) எனும் தலைப்பில் தொடர்ந்து பதிவேற்றம் செய்து விளம்பரப் படுத்தி வருகிறது.

இந்நிலையில், மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்புத் தன்மை குறித்த புகார்கள் வரும் போதெல்லாம், மருந்துகள் தயாரிக்கும் உரிமம் வழங்கும் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்டள் மேல் மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1940 (Drugs and Codmetics Act,1940) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளின் படி உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றனர். தவறிழைத்தோருக்கு எதிராக உரிய நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்பதும் இதில் அடங்கும்.

அண்மையில் அச்சு ஊடகங்களில் இப்பிரச்சினையதொபர்பான செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் மக்களவையில் இதுபற்றி வினா எழுப்பிய நிலையில் ஒன்றிய நல்வாழ்வுத் துறை அமைச்சர் மேற்கண்டவாறு விளக்கத்தை தனது பதிலில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அணைக்கட்டில் – ஒருங்கிணைந்த

# பழக்கூழ் ஆராய்ச்சி மையம் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்திடுக!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 26 -

வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள அணைக்கட்டில் "ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையம்" ஒன்றை நிறுவ, போதுமான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி நாடாளுமன்ற மக்களவையில் விதி எண். 377ன் கீழ் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.

தமிழ்நாட்டின் வேலூர் பகுதி, சிறந்த காலநிலை மற்றும் வளமான மண்ணைக் கொண்டிருப்பதால், வெப்பமண்டலப் பழங்களின் உற்பத்தி அதிகமாக உள்ளது. உள்ளூர் விளைச்சல்கள், குறிப்பாக மாம்பழம், வாழைப்பழம், கொய்யா, சீதாப்பழம் போன்ற பழங்களின் அதிக விளைச்சல், பிராந்திய தோட்டக்கலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்றன.



ஆனால், வேலூரில் தனியாகவோ அல்லது அரசு நிதியுதவியுடனோ "ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையம்" எதுவும் இல்லை.

மாம்பழம் போன்ற பழச்சாறுகளின் சுவையையும், சேமிப்புக் காலத்தையும் மேம்படுத்துவதற்காக, சிட்ரிக் மற்றும் மாலிக் அமிலங்களை உகந்ததாக்குவதில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி ஆய்வுகளை அரசு தொடங்க வேண்டும்.

ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்துவதற்காக, வாழைப்பழக் கூழ் மற்றும் தோல் நார் ஆகியவற்றை பால் பொருட்களில் (தயிர் மற்றும் யோகர்ட் போன்றவை) சேர்ப்பது குறித்த ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

தாவர வேதிப் பகுப்பாய்வின் மூலம், பிராந்தியப் பழங்கள் மற்றும் பனை மரங்களின் சதைப் பகுதியை ஆய்வு செய்து, ஃபிளாவனாய்டுகளைக் கண்டறிந்து, செயல்பாட்டு உணவுகள் மற்றும் மருந்துப் பயன்பாடுகளுக்கான உயிரியல் செயல்பாட்டுக் கலவைகளைப் பிரித்தெடுப்பது, பழக்கூழ் துறைக்கு மதிப்புக் கூட்டலை வழங்கும்.

வேம்பு மற்றும் சீதாப் பழம் போன்ற பழக்கூழ் சாறுகளைப் பயன்படுத்தி, ஆக்சிஜனேற்றத் தடுப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்புப் பயன்பாடுகளுக்காக நானோ துகள்களைத் தொகுக்க பசுமை நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

இதை நனவாக்கவும், உற்பத்தி செய்யப்படும் பழங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், தமிழ்நாட்டின் வேலூரில் உள்ள அணைக்கட்டில் "ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையத்தை" நிறுவ வேண்டும் என்று மத்திய அரசை நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் எம்.பி. நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377ன் கீழ் கோரிக்கை விடுத்தார்.

### வியட்நாம் படகு விபத்தில் இறந்த ரவிசங்கர்

# குடும்பத்தினருக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆறுதல்!

## மகனின் உயர் கல்வி செலவை ஏற்றார்!

திருவண்ணாமலை, ஜூலை 26 -

வியட்நாம் சுற்றுலா படகு விபத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 10நபர்கள் உயிரிழந்தனர். அதில் திருவண்ணாமலைச் சேர்ந்த ரவிசங்கர் என்கிற வியாபாரியும் உயிரிழந்தார். அவரது குடும்பத்தினரை முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ. வேலு சந்தித்து ஆறுதல் கூறினார். அவரது மகனின் உயர் கல்வி செலவை ஏற்றுக்கொள்வதாக குடும்பத்தினரிடம் கூறினார்.

வியட்நாம் நாட்டின் புகுவோக் தீவு அருகே ஜூலை 11 அன்று சுற்றுலா படகு கவிழ்ந்த விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 10பேர் உட்பட 15 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். திடீர் கடல் சீற்றம் மற்றும் இராட்ச அலை காரணமாக விபத்து நேரிட்டது. உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு, ஜூலை14 அன்று தமிழகம் கொண்டு வரப்பட்டு அவரவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

25.07.2026 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு திருவண்ணாமலை ஆனைக்கட்டி தெருவில், வியட்நாம் சுற்றுலா படகு விபத்தில் உயிரிழந்த வியாபாரி ரவிசங்கர் வீட்டிற்கு சென்று, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ. வேலு, குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இறந்த வியாபாரி ரவிசங்கரின் மகன் ராமபிரகாஷ் கல்வி குறித்து கேட்டறிந்தார். மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவனின் கல்லூரி செலவை ஏற்றுக் கொள்வதாக குடும்பத்தினரிடம் முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன் தொ.மு.ச. க.சௌந்தரராசன், மாவட்ட அமைப்பாளர் காலேஜ் குரவி, பகுதி செயலாளர் ந.சீனுவாசன், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, மாவட்டப் பிரதிநிதி இல.குணசேகரன், நகர மன்ற உறுப்பினர் அருணாரவி, மாவட்ட துணை அமைப்பாளர் லக்கி.அரவிந்த், வட்டச் செயலாளர் கோல்டு. மஞ்சு மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த திருவண்ணாமலை வியாபாரி ரவிசங்கர் இல்லத்திற்கு சென்று, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் மகனது உயர் கல்வி செலவினை ஏற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், காலேஜ் ரவி உட்பட பலர் உள்ளனர்.

### நீட் தேர்வு முறைகேடுகள்:

# 47 தேசிய தேர்வு முகமை அதிகாரிகள் பணிநீக்கம்!

## ஒன்றிய அரசு கண்துடைப்பு நடவடிக்கை!

புதுடெல்லி, ஜூலை 26-

நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிரான போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்து வரும் நிலையில், தேசிய தேர்வு முகமையில் பணியாற்றிய 47 அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் ராஜினாமாவை வலியுறுத்தி நாடு முழுவதும் மாணவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் தீவிரப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால், இவ்விவகாரத்தில் பிடிவாதம் பிடித்து வரும் ஒன்றிய அரசு, மாணவர்களின் போராட்டத்தை தணிக்கும் வகையில் சில கண்துடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

தற்போது, நீட் மற்றும் பிற போட்டித் தேர்வுகளில் ஏற்பட்ட வினாத்தாள் கசிவு மற்றும் குளறுபடிகளைத் தொடர்ந்து, தேர்வு முறையை முழுமையாகச் சீரமைக்க உள்ளதாகவும், தேசிய தேர்வு முகமையில் பணியாற்றிய 47 அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் சிலர் மீது சட்ட மற்றும் குற்றவியல் நடவடிக்கையெடுக்கப்பட உள்ளதாகவும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள 47 அதிகாரிகளில் சிலர் மீது கடுமையான சட்டரீதியான மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்பட உள்ளதாகவும் ஒன்றிய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக, ஒன்றிய உயர்கல்வித் துறைச் செயலராக இருந்த வினீத் ஜோஷி அங்கிருந்து மாற்றப்பட்டு, ஒன்றிய ஊராட்சித் துறைச் செயலராக நியமிக்கப்பட்டார்.